**இந்த பாலிசியில், முதலீட்டு இலாகாவில் முதலீட்டு அபாயம் பாலிசிதாரரால் ஏற்கப்படுகிறது.**

''யூனிட் லிங்க்டு இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள் ஒப்பந்தத்தின் முதல் ஐந்து ஆண்டுகளுக்கு எந்த ரொக்கமாக்கலையும் வழங்குவதில்லை. பாலிசிதாரர்கள் ஐந்தாவது ஆண்டின் இறுதிவரை யூனிட் லிங்க்டு இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களில் முதலீடு செய்த பணத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஒப்புவிப்பு செய்ய அல்லது திரும்பப் பெற்றுக்கொள்ள முடியாது.''

## எஸ்பிஐ லைஃப் - ஸ்மார்ட் வெல்த் பில்டர் ஏன்?

நீங்கள் எப்போதும் உங்களுடைய வாழ்க்கையில் முன்னேற்றம் அடைந்திட தனிப்பட்ட மற்றும் பொருளாதார இலக்குகளை நிறைவேற்றிட நோக்கம் கொண்டுள்ளீர்கள். **எஸ்பிஐ லைஃப் - ஸ்மார்ட் வெல்த் பில்டர்** உங்கள் குடும்பத்திற்கு பொருளாதார பாதுகாப்பு வழங்கிட அதேபோல் சந்தை தொடர்புடைய வருவாய் மூலம் உங்கள் சொத்து உருவாக்கும் வாய்ப்பை மேம்படுத்த கவனம் எடுத்துக்கொள்கிறது.

- **பாதுகாப்பு :** ஏதேனும் அசம்பாவிதம் நிகழும்பட்சம், குடும்பத்தின் நிதிநிலை பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
- **நீண்ட கால சொத்து உருவாக்கல் :** ஒரு வருடாந்திர வழக்கமான பிரிமியத்தின் 125% வரை உத்தரவாதமான கூடுதல்கள்# மற்றும் சந்தை தொடர்புடைய லாபத்தின் பலன்களையும் ஒரே நேரத்தில் பெறுவதன் மூலம் இலக்கு அடிப்படையிலான சேமிப்புகளை செய்ய முடியும்.
- 11-வது ஆண்டு முதற்கொண்டு பிரீமியம் ஒதுக்கீடு கட்டணங்கள் இல்லை.
- **இணக்கத்தன்மை :** இந்தத் திட்டத்தின் கீழ் பின்வருபவை உள்ளன
    - பிரீமியங்களை முறையாக அல்லது ஒரு குறுகிய காலத்திற்கு அல்லது ஒரு நேர ஒட்டு மொத்த தொகையாக செலுத்த விருப்பத்தேர்வு.
    - 11 ஃபண்டு விருப்பத்தேர்வுகளிடையே தேர்வு மற்றும் இந்த ஃபண்டுகளிடையே 'மாற்றி' செய்து கொள்ள விருப்பத்தேர்வு.
    - 'ரொக்கத்தொகை தேர்வு' மூலம் முதிர்வு பலனை ஒட்டு மொத்த தொகையாக அல்லது காலக்கிரமப்படியான தவணையில் பெற்றுக்கொள்ளுதல். தீர்வு காலத்தின்போது, முதலீட்டு தொகுமுதலீட்டில் உள்ள முதலீட்டு ஆபத்து பயனாளியினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.
- **ரொக்கமாக்கல் :** 6வது பாலிசி ஆண்டு முதற்கொண்டு அல்லது ஆயுள் காப்பீட்டுதாரர் 18 வயது அடைந்ததன்பேரில் எது பிந்தையதோ அப்போது பகுதி திரும்பப்பெறலாம்.
- **வரி சேமிப்புகள்** :** வருமான வரிச் சட்டம், 1961 கீழ் நிலவும் விதிகளின்படி ஆகும்.


#உத்திரவாத கூடுதல்கள் வருடாந்திர பிரீமியம்/சிங்கிள் பிரீமியத்தின் முன் குறிப்பிடப்பட்ட சதவீதத்தில், முன்மொழியப்பட்ட தேதி அன்று பாலிசி அமலில் இருப்பதற்கு உட்பட்டு, ஃபண்ட் மதிப்பிற்கு 10வது பாலிசி ஆண்டின் முடிவில் மற்றும் அதன்பிறகு ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் கொடுக்கப்படும். பாலிசி காலவரை அதிகமாக இருந்தால், உத்தரவாதமான கூடுதல் அதிகமாக இருக்கும் ரெகுலர் பிரீமியம் திட்டத்தின் கீழ் 30 ஆண்டுகள் பாலிசி காலவரை தேர்வு செய்வதன் பேரில் அதிகபட்சம் 125% உத்தரவாதமான கூடுதல்கள் கிடைக்கிறது.

**வரிச் சலுகைகள் வருமான வரி சட்டங்கள் பிரகாரம் கிடைப்பதால் அவை காலந்தோறும் மாற்றங்களுக்கு உட்பட்டவையாக இருக்கும். விபரங்களுக்கு உங்கள் வரி ஆலோசகருடன் தொடர்பு கொள்ளுங்கள்.


## விளக்கம்

| திரு. சஞ்சய் எஸ்பிஐ லைஃப் - ஸ்மார்ட் வெல்த் பில்டர் பாலிசியை பெற்றார். விவரங்கள் கீழ்க்கண்டவாறு : | | |
|---|---|---|
| வயது - 35 ஆண்டுகள் | திட்டம் வகை - ரெகுலர்<br>இடைவெளி - வருடாந்திரம் | பாலிசி காலம் - 30 ஆண்டுகள்<br>பிரீமியம் செலுத்தும் காலம் (PPT) - 30 ஆண்டுகள் |
| வருடாந்திர பிரீமியம் - ₹50,000 ஆ.ஒ. | அடிப்படை காப்பீட்டுத் தொகை - ₹5,00,000 | ஃபண்ட் - 100% ஈக்விட்டி ஃபண்ட் |

1. **முதிர்வுப் பலன் (முழுமொத்தத் தொகை) :** முதிர்வுத் தேதியன்று சஞ்சய்யினின் முதிர்வுப் பலன், அனுமான முதலீட்டு லாபத்தின் அடிப்படையில், கீழ்க்கண்ட அட்டவணைப்படி அமைந்திருக்கும்:




2. **இறப்புப் பலன் (மொத்த தொகை):** சஞ்சய்யினின் இறப்பு துரதிர்ஷ்டவசமாக 20வது பாலிசி ஆண்டில் நிகழ்ந்தால், இறப்புப் பலன் ஆனது, அனுமான முதலீட்டு லாபத்தின் அடிப்படையில், கீழ்க்கண்ட அட்டவணைப்படி அமைந்திருக்கும்:




^^புள்ளிவிவரங்கள் விளக்க நோக்கங்களுக்காகவும் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்காகவும் ஆகும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஊகிக்கப்பட்டுள்ள விகிதங்கள் ஆண்டு ஒன்றுக்கு முறையே @4% மற்றும் @8% வீதம், விளக்கம் கொடுப்பதற்காக மட்டுமே, இது கட்டணங்களின் அடிப்படையில், எல்லா கட்டணங்களையும் கணக்கில் கொண்டு காட்டப்பட்டுள்ளது. இவை உத்தரவாதமானவை அல்ல மற்றும் இவை லாபத்தின் உச்ச அல்லது கீழ் வரம்பு அல்ல. யூனிட் லிங்க்டு லைஃப் இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள் சந்தை இடர்பாடுகளுக்கு உட்பட்டவை. இந்த ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்படும் பற்பல நிதிகள் மற்றும் நிதிகளின் பெயர்கள் எந்த வகையிலும் இந்த திட்டங்களின் தரத்தை, அவற்றின் எதிர்கால வளர்ச்சி மற்றும் லாபங்களை குறிப்பதாகாது. மேலும் தகவலுக்கு உங்கள் பாலிசியின் சிறப்பு நன்மை விளக்கத்தை கோரவும்.

## திட்ட விவரங்கள்

| | | | |
|---|---|---|---|
| **நுழைவு வயது*** | **குறைந்தபட்சம்:** 2 வயது$$ | **அதிகபட்சம் :** 55 வயது | |
| **முதிர்வு வயது*** | **குறைந்தபட்சம் :** 18 வயது | **அதிகபட்சம் :** 70 வயது | |
| **திட்டம் வகை** | ரெகுலர் பிரீமியம்/லிமிடெட் பிரீமியம்/சிங்கிள் பிரீமியம் | | |
| **பிரீமியம் செலுத்தும் காலம் (பிபிடி) மற்றும் தொடர்புடைய பாலிசி காலம் (பிடி)** | **திட்டம் வகை** | **பாலிசி காலம் (வருடங்கள்)** | **பிரீமியம் செலுத்தும் காலம் (வருடங்கள்)** |
| | **ரெகுலர் பிரீமியம்** | 12-30 (இரண்டும் உட்பட்டது) | பாலிசி காலம் அளவுக்கே |
| | **லிமிடெட் பிரீமியம் செலுத்தும் காலம் (எல்பிபிடி)** | 12-14 (இரண்டும் உட்பட்டது) | 7 |
| | | 15-19 (இரண்டும் உட்பட்டது) | 7/10/12 |
| | | 20-30 (இரண்டும் உட்பட்டது) | 7/10/12/15 |
| | **சிங்கிள் பிரீமியம்** | 5-30 வருடங்கள் (இரண்டும் உட்பட்டது) | பாலிசி துவக்கத்தில் ஒருமுறை செலுத்துதல் |
| **பிரீமியம் தொகை (₹100 மடங்குகளில்)** | **திட்டம் வகை** | **குறைந்தபட்சம் (₹)** | **அதிகபட்சம் (₹)** |
| | **ரெகுலர் பிரீமியம் (வருடாந்திரம்)** | ₹30,000 | ₹2,50,000; குழுவின் ஒப்புதல் வழங்கப்பட்ட காப்புறுதி விண்ணப்ப கணிப்புக்கு உட்பட்டது |
| | **லிமிடெட் பிரீமியம் செலுத்துதல் (வருடாந்திரம்)** | ₹40,000 | |
| | **சிங்கிள் பிரீமியம்** | ₹65,000 | |
| **பிரீமியம் செலுத்தும் இடைவெளி** | சிங்கிள்/வருடாந்திரம் | | |
| **அடிப்படை காப்பீட்டுத் தொகை** | **திட்டம் வகை** | | |
| | **ரெகுலர் பிரீமியம் மற்றும் லிமிடட் பிரீமியம் செலுத்தும் காலம்** | 10 x வருடாந்திர பிரீமியம்[1] | |
| | **சிங்கிள் பிரீமியம்** | 1.25 x சிங்கிள் பிரீமியம் | |

*வயது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளவை யாவும் இப்போது முடிந்து போன பிறந்தநாளின் படியாகும்.

$$வயதுக்கு வராதநபர்கள் என்னும் நிலையில், முதிர்வடையும் நிலையில் வயதுக்கு வந்த நபராக இருக்கும்படியாக பாலிசி காலவரையை பொருத்தமாக தேர்ந்தேடுக்க வேண்டும். வயதுக்கு வராதநபர்கள் என்னும் நிலையில், பாலிசியின் துவக்க தேதி மற்றும் இடரின் துவக்க தேதியும் ஒன்றாகவே இருக்கும்.

[1]வருடாந்திரமாக்கப்பட்ட பிரீமியம் என்பது பொருந்தும் வரிகள் நீங்கலாக ஓர் ஆண்டில் செலுத்தத்தக்க பிரீமியம் தொகை.

‘பிரீமியம் ஒதுக்கீடு கட்டணங்கள்’, ‘பாலிசி நிர்வாகக் கட்டணங்கள்’, ‘ஃபண்ட் நிர்வாகக் கட்டணங்கள்’, போன்ற பற்பல கட்டணங்கள் கழித்துக்கொள்ளப்படும். பிரீமியம் ஒதுக்கீடு கட்டணங்கள் மற்றும் இறப்புக் கட்டணங்கள் தவிர அனைத்து கட்டணங்களும் ஐஆர்டிஏஐ-ன் முன் ஒப்புதலுடன் திருத்தத்திற்கு உட்பட்டவை. கட்டணங்களின் முழுமையான பட்டியலுக்கு மற்றும் அவற்றின் செயல்பாடுகளுக்கும், தயவுசெய்து விற்பனைச் சிற்றேட்டைப் பார்க்கவும்.

முதல் 5 பாலிசி வருடக் காலத்தில் காப்புறுதி ஒப்புவிப்பு கோரிக்கை செய்யப்பட்டால், 6-வது பாலிசி வருடத்தின் முதல் வேலை நாளில் ஃபண்ட் மதிப்புத் தொகை வழங்கப்படும். 5 பாலிசி வருடங்கள் கழிந்த பிறகு காப்புறுதி விடுப்பு செய்யப்படும் பட்சத்தில், ஃபண்ட் மதிப்புத் தொகை உடனடியாக வழங்கப்பட்டுவிடும்.

## ரிபேட்ஸ் அளிக்கத் தடை

**காப்பீட்டுச் சட்டம், 1938-ன் பிரிவு 41 அவ்வப்போது திருத்தி அமைக்கப்பட்டபடி, எடுத்துரைப்பது :**

a) இந்தியாவில் உயிர் அல்லது சொத்து சம்பந்தமான ஒரு புதிய காப்பீடு அல்லது காப்பீட்டைப் புதுப்பித்தல் அல்லது தொடரச் செய்வதை ஊக்குவிக்க நேரடியாக அல்லது மறைமுகமாக, ஒருவருக்குக் கொடுக்கப்படும் கமிஷனில் முழுமையாக அல்லது ஒரு பகுதியை பாலிசி மீது கட்டப்படும் பிரீமியத்தில் ஒரு தள்ளுபடியாக அளிக்கவும் அல்லது பெற்றுக்கொள்ளவும் மற்றும் வெளியிடப்பட்டுள்ள பாலிசி அம்சங்கள் அல்லது காப்பீட்டாளரின் அட்டவணையில் கொடுக்கப்பட்டிருக்கும் தள்ளுபடிகள் தவிர பாலிசி எடுக்க, புதுப்பிக்க அல்லது தொடர ஊக்குவிக்கும் முறையில் எந்த தள்ளுபடியும் வழங்க அல்லது ஏற்றுக்கொள்ள அனுமதி இல்லை.

b) இந்த பிரிவின் விதிகளின் கீழ் நிறைவேற்றுவதில் எவரும் தவறு செய்திருப்பின் அபராதத்திற்கு உரியவர் ஆவார், அது பத்து லட்சம் ரூபாய் வரை இருக்கப்பெறலாம்.

**Toll-free No.:** 1800 267 9090 | SMS **‘LIBERATE’** to 56161 | **Email:** info@sbilife.co.in | **Web:** www.sbilife.co.in
(Between 9.00 am & 9.00 pm)

எஸ்பிஐ லைஃப் - ஸ்மார்ட் வெல்த் பில்டர் என்பது ஒரு தனிப்பட்ட, யூனிட்-லிங்க்டு, நான்-பார்ட்டிசிபேட்டிங், லைஃப் இன்ஷ்யூரன்ஸ் திட்டம்.

**போலியான தொலைபேசி அழைப்புகள் மற்றும் போலியான/மோசடியான சலுகைகள் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்.**
காப்பீடு பாலிசிகள், போனஸ் அறிவிப்பு அல்லது பிரீமியங்கள் முதலீடு போன்ற நடவடிக்கைகளில் IRDAI ஈடுபடுவதில்லை. இது போன்ற தொலைபேசி அழைப்புகளைப் பெறும் பொதுமக்கள் காவல்துறையிடம் புகார் அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

யூனிட் லிங்க்டு லைஃப் இன்ஷ்யூரன்ஸ் தயாரிப்புகள் மரபுரீதியான இன்ஷ்யூரன்ஸ் தயாரிப்புகளிலிருந்து வேறுபட்டவையாகும் மற்றும் சந்தை ஆபத்துக்கு உட்பட்டவையாகும். யூனிட் லிங்க்டு ஆயுள் காப்பீட்டு பாலிசிகளில் செலுத்தும் பிரீமியம் மூலதன சந்தைகளுடன் தொடர்புடைய தலீட்டு ஆபத்துகளுக்கு உட்பட்டவையாகும் மற்றும் நதியின் செயலாற்றல் மற்றும் மூலதன சந்தையை இயக்கும் காரணிகள் அடிப்படையில் யூனிட்களின் NAVகள் ஏறவோ அல்லது இறங்கவோ செய்யும் மற்றும் காப்பீட்டுதாரரே அவருடைய முடிவுகளுக்கு பொறுப்பாவார். எஸ்பிஐ லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் என்பது காப்பீட்டு நிறுவனத்தின் பெயர் மட்டுமே யாகும் மற்றும் எஸ்பிஐ லைஃப்-ஸ்மார்ட் வெல்த் பில்டர் என்பது யூனிட் லிங்க்டு லைஃப் இன்ஷ்யூரன்ஸ் ஒப்பந்தத்தின் பெயர் ஆகும் மற்றும் ஒப்பந்தத்தின் தரம், அதன் எதிர்கால வளர்ச்சி அல்லது லாபங்களை எந்தவகையிலும் குறிப்பதாகாது. தயவு செய்து உங்களுடைய காப்பீட்டு ஆலோசகர் அல்லது இடையீட்டாளர் அல்லது காப்பீட்டாளரின் பாலிசி ஆவணத்திலிருந்து தொடர்புடைய ஆபத்துக்கள் மற்றும் பொருந்தக் கூடிய கட்டணங்கள் பற்றி அறிந்து கொள்ளவும். இந்த ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்படும் பற்பல நிதிகள், நிதிகளின் பெயர்கள் ஆகும் மற்றும் எந்த வகையிலும் இந்த திட்டங்களின் தரத்தை, அவற்றின் எதிர்கால வளர்ச்சி மற்றும் லாபங்களை குறிப்பதாகாது. ஃபண்ட் விருப்பத்தேர்வுகளின் கடந்தகால செயலாற்றல் எதிர்கால செயலாற்றலை சுட்டிக்காட்டுவதாகாது. இந்த பாலிசியின் கீழ் அளிக்கத்தக்க அனைத்து பலன்களும் வரிச் சட்டங்களுக்கு மற்றும் அவ்வப்போது நிலவும் இதர வரிச் சட்டங்களுக்கு உட்பட்டவை, தயவுசெய்து விவரங்களுக்கு உங்கள் வரி ஆலோசகரிடம் கலந்தாலோசிக்கவும். இடர் காரணிகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து மேலும் விவரங்களுக்கு தயவுசெய்து விற்பனையை முடிக்கும் முன்பாக விற்பனைச் சிற்றேட்டை கவனமாகப் படிக்கவும். இங்கே காட்டப்பட்டிருக்கும் வர்த்தகச் சின்னம் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவிற்குச் சொந்தமானது, எஸ்பிஐ லைஃப் உரிமம் பெற்று அதைப் பயன்படுத்துகிறது. எஸ்பிஐ லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்., பதிவு மற்றும் கார்ப்பொரேட் அலுவலகம் : ‘நடராஜ்’, எம். வி. ரோடு, வெஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் ஹைவே ஜங்ஷன், அந்தேரி (கிழக்கு), மும்பை-400 069. **IRDAI பதிவு எண் 111** | CIN : L99999MH2000PLC129113.

NW/1K/Cr1/ver1/12/21/SP/TAM